தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்

# TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY

(With UGC 2(f) & 12(B) status and NAAC Accredited with 'A' grade in 1st cycle)

(Established under Tamil Nadu Act 33 of 2008)

Gangai Amman Kovil Street, Karapakkam, Chennai – 600 097

---

**No. TNTEU/Admin/2024/ 01780** **Date: 25.11.2024**

**Dr.K.Rajasekaran, Ph.D.,**
Registrar i/c

To,

The Principals of Affiliated Colleges of Education,
Tamil Nadu Teachers Education University.

Respected Sir/Madam,

Sub: TNTEU – Affiliated Colleges – 75th Constitution Day programme and Pledge – Intimation of - Reg.

Ref: Letter No. 15168/ அநமு-I/2024, நாள்: 23.11.2024 received from Law Department, Secretariat, Chennai – 600 009.

*******

As per the reference cited above, the Principals of Affiliated Colleges of Education are requested to celebrate the 75th Constitution Day 2024 programme and pledge on **26th November 2024 at 11.00 a.m.** without fail and conduct various events to promote the values of the constitution among the students. The referenced letter and pledge are enclosed below.

K. [signature] 25/11/24

Registrar i/c

**Enclosure**: As Above

சட்ட(அநமு-I)த்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-9.

<u>கடித எண். 15168/அநமு-I/2024, நாள் 23.11.2024</u>

அனுப்புநர்

திரு.சி.ஜார்ஜ் அலெக்சாண்டர், எம்.ஏ.,எம்.எல்.,
அரசு செயலாளர்.

<u>பெறுநர்</u>

அனைத்து கூடுதல் தலைமைச் செயலாளர்கள் /
முதன்மைச் செயலாளர்கள் / செயலாளர்கள்,
தலைமைச் செயலகம், சென்னை-09.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை-104.
பதிவாளர், உயர்நீதிமன்றம் மதுரை கிளை, மதுரை -625023.
செயலாளர், தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு,
சென்னை - 600 104.
தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர்,
தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், சென்னை-106.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-02.
அனைத்து துறைத் தலைவர்கள் / அனைத்து சார்நிலை அரசு அலுவலகங்கள் /
வாரியங்கள் / கழகங்கள்,
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
அனைத்து மாநகராட்சி / நகராட்சி ஆணையர்கள்,
அனைத்து பல்கலைக்கழகங்கள்,
அனைத்து பள்ளிகள், கல்லூரிகள்,
தன்னாட்சி அமைப்புகள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும்
பொதுத்துறை நிறுவனங்கள்.

ஐயா/அம்மையீர்,

பொருள்: சட்டத்துறை - 75-வது இந்திய அரசியலமைப்பு தினம் 26.11.2024 அன்று அனுசரிக்கப்படுதல் - இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரையினை வாசிக்க ஏற்பாடு செய்தல் - தொடர்பாக.

-----

2024-ஆம் ஆண்டு, நவம்பர் 26-ஆம் நாள் 75வது இந்திய அரசியலமைப்பு தினத்தை முன்னிட்டு, தலைமைச் செயலகத்திலுள்ள அனைத்துத் துறைகளிலும், மாண்பமை உயர்நீதிமன்றம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் உள்ளிட்ட அனைத்து துறைத் தலைவர் அலுவலகங்களிலும், அனைத்து சார்நிலை அரசு

அலுவலகங்கள், மாநில அரசின் அனைத்து அலுவலகங்கள், தன்னாட்சி அதிகார அமைப்புகள் / நிறுவனங்கள், தன்னாட்சி அரசு நிறுவனங்கள், அனைத்துப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளிலும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரையை 26.11.2024 அன்று காலை 11.00 மணிக்கு அந்தந்த அலுவலகங்கள் / இடங்களிலிருந்து வாசிக்க ஏற்பாடு செய்யவும் மேலும், அனைத்துப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் அரசியலமைப்பு நெறிமுறைகள் பற்றிய பேச்சுப் போட்டிகள் / கருத்தரங்குகள் / வினாடி வினா நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடு செய்யுமாறும் தங்களை கேட்டுக்கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரையின் நகல் ஒன்றினையும் இக்கடிதத்துடன் இணைத்தனுப்பப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,

23.11.24

அரசு செயலாளருக்காக.

23/11/2024

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம், இந்திய நாட்டினை [1][இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்],

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,

எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,

சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை

ஆகியவற்றை எய்திடச் செய்யவும்,

அவர்கள் அனைவரிடையேயும்

தனி மனிதனின் மாண்பு, [2][நாட்டுமக்களின் ஒற்றுமை, ஒருமைப்பாடு] இவற்றை உறுதிப்படுத்தும்

உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.